**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் ஜப்பானின் IM ஜப்பான்** ஆகியன இணைந்து விஷேட திறனுடனான பணியாளர் வேலைத்திட்டத்தின் கீழ் ஜப்பானில் தாதியர் சேவைத் துறை மற்றும் உணவு சேவைத் துறைகளில் உள்ள வேலைவாய்ப்பு வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்பு **இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில்** நடைபெறுகிறது.

அதற்காக, பின்வரும் தகுதிகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் **உரிய சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களுடன் 2024.07.18 ஆம் திகதி மு.ப 9.00மணிக்கு, இல.234, டென்ஸில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லை என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக பிரதான கேட்போர் கூடத்திற்கு வருகை தரவும்.**

## தேவையான அடிப்படைத் தகைமைகள்

- 18-35 வயதிற்குட்பட்டிருத்தல்.
- ஜப்பானிய மொழிப்புலமைப் பரீட்சை JLPT பரீட்சையில் N4 மட்டம் அல்லது JFT சித்தியடைந்திருத்தல் அல்லது அதற்கு மேலதிகமாக.
- மேற்படி தொழிலுக்காக பிரயோகப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.
- உடம்பில் Tattoos (டட்டு) இல்லாமல் இருத்தல்.
- க.பொ (உ/தரம்) பூர்த்தி செய்திருத்தல்.(அரச அல்லது தனியார் பாடசாலையில் கல்விக் காலம் 13 வருடங்கள் பூர்திதியடைந்திருத்தல்.)
- உயரம் பெண்கள் - 150Cm அல்லது அதற்கு கூடுதலாக இருப்பதுடன் ஆண்கள்-160cm அல்லது அதற்கு கூடுதலாக இருத்தல்.
- எடை பெண்கள்- 40kg அல்லது அதற்கு கூடுதலாக இருப்பதுடன் ஆண்கள் - 50Kgஅல்லது அதற்கு கூடுதலாக இருத்தல்.
- நிறகுருட்டுத் தன்மை இல்லாதிருத்தல்.(பார்வைத் திறன் 0.7க்கு கூடுதலாக மற்றும் இலங்கைப் பார்வைத் திறன் 6/9க்கு கூடுதலாக இருத்தல்.
- 03 அல்லது 05 வருடங்கள் தொழிநுட்ப சேவைப் பயிலுனர்களாக சேவை செய்த 35 வயதிற்குட்பட்டவர்களில் பிரயோகப் பரீட்சைக்குத் தோற்றதவர்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

  **(இவ் ஆட்சேர்ப்பிற்கு மாத்திரம் எழுத்துப் பரீட்சை மற்றும் உடற் தகுதிப் பரீட்சைகள் நடைபெறாது)**

**<u>தேவையான ஆணங்கள்</u>**

- சுயவிபரக் கோவை, தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டு
- JLPT/ NAT சித்தியடைந்த சான்றிதழ்
- பாடசாலை விடுகைப் பத்திரம்
- திறன் பரீட்சை சான்றிதழ்கள்